RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 20 | ஜனவரி.27 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# வெல்வோம் இருநூறு; படைப்போம் வரலாறு: முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை

தஞ்சாவூர், ஜன.27-

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் திமுகவில் மாற்றுக் கட்சியினர் இணையும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில், ஓபிஎஸ் அணியில் இருந்து விலகி திமுகவில் இணைந்த முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் ஆதரவாளர்கள் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: இது இணைப்பு விழாவா? இணைப்பு விழா மாநாடா? என்று எண்ண கூடிய அளவுக்கு, இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் பேசாமல் போனால், உங்களுக்கு நிம்மதி இருக்காது, எனக்கும் நிம்மதி இருக்காது.



சுயமரியாதை

நம்முடைய முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் திமுகவில் இணைத்து கொண்டு இருக்கிறார். எம்ஜிஆர், ஜெயலலிதா தலைமையில் வைத்திலிங்கம் பணியாற்றிய போது சுறுசுறுப்பாக பணியாற்றிய காட்சியை நாம் பார்த்தது உண்டு. எம்ஜிஆர் மறைவுக்கு பிறகு அதிமுக உடைந்து சின்னாபின்னமாகி இருந்த நிலையில், வைத்திலிங்கம் சட்டசபையில் அமர்ந்து இருக்கும் காட்சியை நான் பார்ப்பேன். அவர் முகத்தில் ஒரு சோர்வு இருந்து கொண்டு இருக்கும். வேண்டா வெறுப்போடு சில கேள்விகளை கேட்பார். அவர் உள்ளத்தில் சுயமரியாதையுடன் இயங்க முடியவில்லையே என்ற எண்ணம் இருந்து கொண்டு இருக்கிறது.

வெல்வோம்

லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வைத்திலிங்கம் பணியாற்ற போகிறார். தேர்தல் நெருங்கி கொண்டு இருக்கிறது. தேர்தலில் நாம் மிகப்பெரிய வெற்றியை பெறப்போகிறோம். இணைந்து இருக்கும் தொண்டர்களையும், வைத்திலிங்கத்தையும் வரவேற்கிறேன். தேர்தல் பணியாற்ற உறுதியேற்போம். சபதம் ஏற்போம். மீண்டும் திமுக அரசு உதயமாகி ஏற்கனவே செய்திருக்கும் சாதனைகளை மிஞ்சக்கூடிய பல சாதனைகளை உருவாக்கி தருவதற்கு நம்முடைய பணிகள் மும்முரமாக இருக்க வேண்டும். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. ஒன்றாக வெல்வோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## “டபுள் டிஜிட் வளர்ச்சியை பதிவு செய்த தமிழகத்துக்கு எதற்கு டபுள் இன்ஜின்?” : உதயநிதி கேள்வி

சென்னை: ஜன.27-

இந்தியாவில் டபுள் டிஜிட் வளர்ச்சியை பதிவு செய்த எங்களுக்கு எதற்கு டபுள் இன்ஜின் என்று பிரதமர் மோடிக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

மொழிப்போர் தியாகிகள் நினைவேந்தல் நிகழ்ச்சி ‘தீ பரவட்டும்’ எனும் தலைப்பில் திருவொற்றியூரில் நேற்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதற்கு மாவட்டச் செயலாளரும் எம்எல்ஏவுமான எஸ்.சுதர்சனம் தலைமை தாங்கினார்.

இதில் உதயநிதி மேலும் பேசியதாவது: ஹரியானா, பிஹார், சத்தீஸ்கர், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் தாய் மொழிகளை இந்தி விழுங்கிவிட்டது. தமிழகத்தில் மும்மொழிக் கொள்கை என்று இந்தியை திணிக்கும் முயற்சியாக குலக்கல்வி திட்டத்தையும், சம்ஸ்கிருதத்தையும் நுழைக்க பார்க்கின்றனர்.

எனவே புதிய கல்விக்கொள்கையை ஏற்க முதல்வர் மு.க.ஸ்டாலின் மறுத்துவிட்டார். மொழி உரிமை என்று வரும்போது ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் எடுத்துக்காட்டாக தமிழகம் விளங்கி கொண்டிருக்கிறது. இதனால் மத்திய பாஜக அரசுக்கு தமிழகத்தையும், முதல்வரையும் பார்த்தால் கோபம் வருகிறது.

இந்தியாவிலேயே முதல்முறையாக டபுள் டிஜிட் வளர்ச்சியை பதிவு செய்த தமிழகத்துக்கு எதற்கு டபுள் இன்ஜின், கரோனா நேரத்தில் தட்டுமுட்டு சாமான்களை தட்டுங்கள், வீட்டில் விளக்கு ஏற்றுங்கள் என்று கூறியவர்தான் பிரதமர் மோடி.

கரப்ஷன், மா∴பியா, க்ரைம் நிறைந்திருப்பதாக தமிழகத்தை விமர்சிக்கிறார். கரப்ஷனுக்கு வாரிசான அதிமுகவின் பழனிசாமி, டெல்லி மா∴பியாவிடம் பணத்தை இழந்த அமமுகவின் தினகரன், மருத்துவ கல்லூரிகளுக்கு முறைகேடாக அனுமதி கொடுத்து க்ரைமில் மாட்டிய அன்புமணி என மூவரும் மோடியுடன் தான் இருக்கிறார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்வில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கலாநிதி வீராசாமி எம்.பி. மேயர் பிரியா, எம்எல்ஏக்கள் ஆர்.டி.சேகர், கே.பி.சங்கர், ஜோசப் சாமுவேல், ஐட்ரீம் இரா. மூர்த்தி, வெற்றியழகன், ஜே.ஜே. எபினேசர், திமுக இளைஞரணி துணை செயலாளர் ஜோயல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



■ சென்னை, காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மை விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய பதக்கங்களையும், கோப்பைகளையும் பெற்றவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.









## கிருஷ்ணகிரியில் 77 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு, மாவட்ட விளையாட்டு அரங்கில் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் தேசிய கொடியை பறக்க விட்டு மரியாதை செலுத்தினார்

கிருஷ்ணகிரி, ஜன.27-

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் நாட்டின் 77வது குடியரசு தின விழா இன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் தேசிய கொடியை பறக்க விட்டு மரியாதை செலுத்தினார். பின்னர் திறந்த வேனில் சென்று காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையை மாவட்ட ஆட்சியர் ஏற்றுக்கொண்டார். இதனை யடுத்து சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வெண்புறாக்களையும் ஆட்சியர் பறக்க விட்டார். பின்னர், முன்னாள் படைவீரர் நலத் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலை உள்ளிட்ட 9 துறைகளின் சார்பில் 53 பயனாளிகளுக்கு ரூ. 25104713 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளையும், துறைகளின் சார்பில் சிறப்பாக பணியாற்றிய அரசு ஊழியர்களுக்கு நற்சான்றிதழ்களையும் ஆட்சியர் வழங்கினார். இந்த விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனை குறள், உதவி காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வக்காரே, கூடுதல் கண்காணிப்பாளர் நமச்சிவாயம், சங்கர், டிஎஸ்பிக்கள் ராமச்சந்திரன், முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், அலுவலர்கள், சுதந்திர போராட்ட தியாகிகள் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

## பழநியில் தைப்பூசத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்: பிப்.1 தேரோட்டம்

திண்டுக்கல், ஜன.27-

திண்டுக்கல் மாவட்டம் பழநியில் தைப்பூசத் திருவிழா பெரியநாயகியம்மன் கோயிலில் காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வாக பிப்.1ம் தேதி மாலை தேரோட்டம் நடைபெற உள்ளது.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பெரியநாயகியம்மன் கோயிலில் தைப்பூசத் திருவிழா திங்கட்கிழமை (ஜன.26) காலை 10 மணிக்கு மேல் கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக, சுவாமி, கொடிமரம் மற்றும் கொடி ஆகியவற்றுக்கு சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து, வேல், மயில், சேவல் இடம் பெற்ற கொடியேற்றப்பட்டது. கொடி மண்டபத்தில் வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி எழுந்தருளினார்.

கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, அறங்காவலர் குழுத் தலைவர் சுப்பிரமணியன், அறங்காவலர்கள் சுப்பிரமணியம், தனசேகர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவில் தினமும் சுவாமி ரத வீதிகளில் தங்க மயில், வெள்ளி மயில், ஆட்டுக்கிடா, காமதேனு உள்ளிட்ட வாகனங்களில் வீதியுலா வந்து பக்தர்ளுக்கு காட்சியளிப்பார்.

விழாவின் 6 ம் நாளான ஜன.31ம்தேதி இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது. அன்று இரவு 9 மணிக்கு மேல் சுவாமி மணக்கோலத்தில் வெள்ளித்தேரில் உலா



வருவார்.

விழாவின் முக்கிய நிகழ்வாக பிப்.1ம் தேதி தைப்பூசத்தன்று காலை 5 மணிக்கு மேல் சண்முகநதிக்கு எழுந்தருளல், காலை 11 மணிக்கு மேல் தேரேற்றம், மாலை 4 மணிக்கு மேல் தேரோட்டம் நடைபெற உள்ளது. நான்கு ரத வீதிகளில் வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி அளிப்பார். பிப்.4ம் தேதி காலை 9 மணிக்கு திருவூடல் நிகழ்ச்சியும், இரவு 7 மணிக்கு மேல் தெப்பத்தேர் விழா நடைபெறும். அன்று இரவு 11 மணிக்கு மேல் கொடிஇறக்கத்துடன் விழா நிறைவு பெறும்.

2 லட்சம் பேருக்கு அன்னதானம்: தைப்பூசத் திருவிழா வையொட்டி ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரையாக வந்த வண்ணம் உள்ளனர். அவ்வாறு வரும் பக்தர்களுக்கு தேஸ்வதானம் சார்பில் இன்று (ஜன.26) முதல் 10 நாட்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று காலை 8 மணி முதல் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது . ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் கோயில் அருகே உள்ள காவடி மண்டபத்தில் தினமும் 14,000 பேருக்கும், பழநி அருகேயுள்ள கொங்கூர் பக்தர்கள் ஓய்வு கூடத்தில் தினமும் 6,000 பேருக்கும் என மொத்தம் 20,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க தேவஸ்தானம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினமும் 10,000 பக்தர்கள் வீதம் 10 நாட்களும் சேர்த்து மொத்தம் 2 லட்சம் பக்தர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

## தாம்பரம் வீடியோ புகைப்படக் கலைஞர்கள் பெட்ரேஷன் சார்பில் பொங்கல் விழா

தாம்பரம், ஜன.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வீடியோ புகைப்படக் கலைஞர்கள் பெட்ரேஷன் சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் TVPF பொங்கல் விழா மற்றும் அறிமுக கூட்டம், கிழக்கு தாம்பரம்,

ரூபி பார்டி ஹாலில் சங்க செயலாளர் முனைவர் கோபி ஏற்பாட்டில், சங்க தலைவர் E.M.அர்ஜுன் அவர்கள் தலைமையில் சிறப்பாக ஜனவரி 11 தேதி கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக TVPA மாநில தலைவர் கடலூர் முத்து, TVPA மாநில செயலாளர் மதுரை பாஸ்கர், CVPA முன்னாள் பொருளாளர் K.விஜயகுமார், மற்றும் சினிமா பிரபலங்கள்:

திருடா திருடி இசை அமைப்பாளர் மற்றும் பெப்சி துணை தலைவர் கலைமாமணி தினா, தெறி புகழ் DR.ND.பிரபுதாஸ், முண்டாசுப்பட்டி புகழ்



ரகுராம் திரைபடத்தின் கதாநாயகன் ஆதேஷ் பாலா, சென்னை to ஹாங்காங் கங்கேஷ், டிராபிக் ராமசாமி திரைப்பட நடிகை DR. நேத்ரா ஸ்ரீ, பள்ளி ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர் T.வசந்தகுமாரி, ALF தலைவர் G.கலைவாணி, லியோ புகழ் ஜவஹர், (நாசர் தம்பி - ஒளிப்பதிவாளர்) கேப்டேன் பிரபாகரன் புகழ் வின்சென்ட் ராய், அந்தோனியார் இயக்குனர் CT.பாண்டி, சூரி, கிருஷ்ணா லீலை இயக்குனர் செல்வன், ஒளிப்பதிவாளர் திரு.கனகராஜ், முன்னாள் வங்கி மேலாளர் M.A.ராஜேந்திரன் உள்ளட்டோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## காணாமல் போனவர் குறித்து தகவல் தேவை



சென்னையில் சிகிச்சை பெற்று வந்தவர் மாயம்

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த திருத்தணி (எ) தணிகாசலம் என்பவர் கடந்த 16/01/2026 (வெள்ளிக்கிழமை) மதியம் முதல் காணாமல் போயுள்ளார்.

முக்கிய விவரங்கள்:

* பெயர்: திருத்தணி @ தணிகாசலம்
* வயது: சுமார் 35
* குறிப்பு: இவர் கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் காந்தி மருத்துவமனையில் இருந்து வெளியேறியவர், இதுவரை இருப்பிடம் திரும்பவில்லை. இவரைப் பற்றிய தகவல் ஏதேனும் தெரிந்தால் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

தொடர்பு எண்கள்:

* 8825699907 * 9655581873 * 8248759213



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் துணை மேயர் தி.நாகராஜன் தேசியக்கொடியினை ஏற்றி வைத்ததை தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார் அருகில் கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## மதுரையில் குடியரசு தின அரசு விழா: ரூ.61.93 லட்சம் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

மதுரை, ஜன.26-

76 வது குடியரசு தின விழா இன்று மதுரை ஆயுதப்படை பயிற்சி மைதானத்தில் அரசு மரியாதையுடன் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், தேசியக் கொடியை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். விழாவில் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்.

விழாவின்போது ரூ.61.93 லட்சம் மதிப்பீட்டில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் 30 பயனாளிகளுக்கு வழங்கப் பட்டன. தொடர்ந்து, மாவட்ட காவல்துறையைச் சேர்ந்த 103 பேருக்கும், மதுரை மாநகர் காவல்துறையைச் சேர்ந்த 182 பேருக்கும் என மொத்தம் 285 காவல்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு



முதலமைச்சரின் காவலர் பதக்கங்கள் வழங்கப் பட்டன. மேலும், சிறப்பாக பணியாற்றிய மாவட்ட முதல் நிலை அலுவலர்கள், காவல்துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என மொத்தம் 333 நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் தொடர் மழையால் 500 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் சேதம்

திருவாரூர்/ தஞ்சாவூர், ஜன.27-

திருவாரூர் மாவட்டத்தில் தொடர் மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த 500 ஏக்கர் பரப்பளவிலான சம்பா நெற்பயிர்கள் முற்றிலும் சாய்ந்து சேதமடைந்துள்ளன. திருவாரூர் மாவட்டம் முழுவதும் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடி பணியில் விவசாயிகள் ஈடுபட்டனர். தற்போது பல்வேறு பகுதிகளில் அறுவடை பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், கடந்த 2 தினங்களாக பெய்த மழையால் திருவாரூர் அருகே கானூர், ஓடாச்சேரி, தென் ஓடாச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் அறுவடைக்கு தயாராக இருந்த 500 ஏக்கர் பரப்பளவிலான சம்பா நெற்பயிர்கள் முற்றிலுமாக சாய்ந்து, நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன.

ஏற்கெனவே பெய்த மழையால் விவசாயிகள் மிகப்பெரிய பாதிப்பை சந்தித்திருந்த நிலையில், தற்போது பெய்யும் மழையால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து கானூர் விவசாயி அழகர்ராஜ் கூறியது: கானூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் 500 ஏக்கர்



பரப்பளவில் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள சம்பா நெற்பயிர்கள் மழையில் நனைந்து சாய்ந்துவிட்டன.

உடனடியாக வேளாண் துறை அதிகாரிகள் பார்வையிட்டு கணக்கெடுப்பு செய்ய வேண்டும். ஆண்டுதோறும் பயிர்க் காப்பீடு செய்து வருகிறோம். அந்த காப்பீடு விவசாயிகளுக்கு கிடைக்கப் பெறுவதில்லை. பயிர்க் காப்பீடு திட்டத்தில் விதிகளை தளர்த்தி, பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும் என தெரிவித்தார்.

மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை யளவு விவரம்(மி.மீட்டரில்): நீடாமங்கலம் 10, நன்னிலம் 9.60, திருவாரூர் 9, திருத்துறைப்பூண்டி 8.60, குடவாசல் 6.40, வலங்கைமான் 5, முத்துப்பேட்டை 4.60, மன்னார்குடி 3. இதேபோல, தஞ்சாவூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் சாரல் மழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் இரவு வரை அவ்வப் போது விட்டுவிட்டு இந்த சாரல் மழை பெய்த தால், பொதுமக்கள் அவதிப் பட்டனர். மழை ஒருபக்கம் இருந்தாலும், கடுமையான குளிரும் நிலவியது. இந்த மழையால் சம்பா அறுவடை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா நெல் 3.50 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், டிச.15ம் தேதி முதல் அறுவடை தொடங்கியுள்ளது.

இதற்காக மாவட்டம் முழுவதும் 483 நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 20 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட் டுள்ளது. நெல் அறுவடைக்காக வெளி மாவட்டங்களிலிருந்து ஏராளமான அறுவடை இயந்திரங்களும் வந்துள்ளன.

இந்நிலையில், மாவட்டம் முழுவதும் சாரல் மழை பெய்து வருவதால், நெற்கதிர்களில் ஈரப்பதம் அதிகரித் துள்ளது. மேலும், சில வயல் பகுதி களில் தண்ணீர் தேங்கியும், ஈரப்பதம் அதிகரித் துள்ளதால், நெற்கதிர்கள் வயலிலேயே சாய்ந்து காணப்படுகின்றன. இதனால் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.



## தாம்பரம் மாநகராட்சி பம்மல் மண்டல அலுவலகத்தில் 77 வது குடியரசு தின விழா:

பம்மல், ஜன.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் மண்டல அலுவலகத்தில் 77 வது குடியரசு தின விழா பம்மல் மண்டல குழுத் தலைவரும், பகுதி செயலாளருமான வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பம்மல் மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி தேசிய கொடியேற்றி இனிப்புகள் வழங்கி குடியரசு தின விழா குறித்து சிறப்புரையாற்றினர். இதனை தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றுபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் மாமன்ற உறுப்பினர்கள் மதினாபேகம், சத்யபிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், கல்யாணி பிரபு, சன்முகசுந்தரி ஜெய்குமார், இன்பசேகர் மற்றும் பம்மல் மண்டல அலுவலர்கள், துப்புறவு பணியாளர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் உட்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம். கீழமாத்தூர் கிராமத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., சிறப்பு பார்வையாளராக பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

## பாமக இருக்கும் கூட்டணியில் விசிக இடம்பெறுமா? திருமாவளவன் 'வழவழா கொழகொழா'

சென்னை, ஜன.27-

பாமக இடம்பெறும் கூட்டணியில் விசிக இடம்பெறுமா ? என்ற கேள்விக்கு, நேரடியாக பதிலளிக்காமல் 'அதிமுக பாஜக இருக்கிற அணிகளில் இடம் பெறுவதில்லை என 2011 ல் எடுத்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த முடிவில் தெளிவாக உள்ளோம்' என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார். சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக, சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று திருச்சிக்கு வந்த அவர், செய்தியாளர்களிடம் கூறியது: இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்னிறுத்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சி செயல்பட்டு வருகிறது. தேசிய அளவில் அவரவர் தாய்மொழியை பாதுகாக்க வேண்டியதேவை உள்ளது.

ஒரே தேசம், ஒரே கலாச்சாரம், ஒரே மொழி, ஒரே மதம் என்ற வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவது நாட்டின் பன்மைத்துவத்துக்கு ஆபத்தாக முடியும். இரட்டை இன்ஜின் அரசு என பிரதமர் மோடி சொல்வது டெல்லியில் ஒரு இன்ஜின், தமிழகத்தில் ஒரு இன்ஜின் என்பதாக சொல்கிறாரா என்ற தெளிவு தேவை. தமிழகத்தில் அதிமுக தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி இயங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசியபோது, தமிழகத்தில் பிரதமரின் தலைமையில் கூட்டணி ஆட்சி மலரும் என்கிறார்.

அதிமுக ஆட்சி மலரும் என்ற நிலை மாறி, கூட்டணி ஆட்சி மலரும் என கூறுவது கவலையளிக்கிறது. பாஜகவின் பிடிக்குள் அதிமுக சென்றுள்ளது. 2011 தேர்தலின்போது அதிமுக, பாஜக இருக்கிற அணிகளில் இடம்பெறுவதில்லை என நாங்கள் எடுத்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம். பாமக ராமதாஸ் அணி திமுக கூட்டணிக்கு வர வாய்ப்புள்ளதா என ஆருடம் சொல்ல அவசியமும், தேவையும் எனக்கு இல்லை. திமுக அணியுடன் ராமதாஸ் இணைவது குறித்து முடிவு எடுக்க வேண்டியது திமுகதான்.

பாமக இடம்பெறும் கூட்டணியில் விசிக இடம்பெறுமா என கேட்கிறீர்கள். இந்த விவகாரத்தில் நாங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த முடிவில் தெளிவாக உள்ளோம். பாஜக தலைமையிலான அரசையோ, செயல்பாடுகளையோ விமர்சிக்க வேண்டிய இடத்தில்கூட தவெக தலைவர் விஜய் விமர்சிக்கவில்லை என்பது அவர் மீதான சந்தேகத்தை அதிகரிக்கிறது. இந்த தேர்தலில் விஜய் தனித்தோ அல்லது தனது தலைமையில் கூட்டணியை உருவாக்கியோ போட்டியிடுவார் என நினைக்கிறேன்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா தேவாரம் கிராமத்தில் உள்ள (செட்டிகுளம்) ஊர் பொது குளம் இந்த குளத்தை பாராகுட் கல்பவிருட்சா அறக்கட்டளை மற்றும் செட்டிகுளம் கண்மாய் விவசாயிகள் சங்கமும் இணைந்து தூர்வாரும்பணி நடைபெற்றது. இதனால் தேவாரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள அனைத்து நீர் நிலைகளிலும் தண்ணீர் மட்டம் உயரவும் மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும் சுற்றியுள்ள அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இக்குளம் சீரமைக்கப்பட்டு பணி நிறைவடைந்தால் அனைத்து விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர், இதன் பணி நிறைவடைந்தது. இச்சேவையை பாராட்டும் விதமாக தேனி மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் தலைமையில் நடைபெற்ற 77வது குடியரசு தின விழாவில் பாராகுட் கல்பவிருட்சா நிறுவனத்தை பாராட்டி சிறந்த நற்பணி சேவைக்கான பாராட்டு சான்றிதழையும் கேடயத்தையும் வழங்கி கௌரவித்தார்.



■ ராமநாதபுரம் ஆயுதப் படை மைதானத்தில் நடந்த 77 ஆவது குடியரசு தின விழாவில், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, அரசு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் ஞா.சரவணப் பெருமாளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி. சந்தீஷ், மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கர நாராயணன் உள்ளனர்.

# சிவகங்கையில் 77-வது குடியரசு தின விழா

சிவகங்கை, ஜன.27-

சிவகங்கை மாவட்டம் மைய நூலகத்தில் சிறப்பாக நடைபெற்றது மாவட்ட மைய நூலகர் வெங்கடவேல் பாண்டி தேசிய கொடி ஏற்றி குடியரசு தின விழா பற்றி சுதந்திரத்திற்காக பாடுபட்ட எண்ணற்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை அவர்களது புத்தகங்களை வாசகர்களுக்கும் பொதுமக்களுக்கும் அதை கொண்டு சேர்க்க வேண்டும்

என்று சிறப்புரையாற்றி சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சிறந்த நாடகநூல் விருதாளர் எழுத்தாளர் அ.ஈஸ்வரன் அவர்கள் கலந்து விழாவில் பேசும்போது நூலகத்தை பயன்படுத்திய எல்லோரும் நூலகம் அவர்களை உயர்ந்த பதவியில் அமர வைத்திருக்கிறது. அதுபோல வருங்கால பள்ளியில் படிக்கும் மாணவர்களை வருங்காலத்தில் பெரிய நிலைக்கு உயர்த்த நூல்கர்களாகிய நீங்கள் மாணவர்களை நூலகத்திற்கு அழைத்து வந்து அவர்கள் வாசிப்பு பழகத்தை அதிகப்படுத்த வேண்டும் எதிர்காலத்தில் இந்த சமுகத்தில் அவர்கள் பொறுப்புள்ள மனிதர்களாக மாற நூலகத்தை பயன்படுத்திக் கொள்ள அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்

என்று உரையாற்றி சிறப்பித்தார்கள் விழாவில் இரண்டாம் நிலை நூலகர்கள் முத்துக்குமார் வெள்ளைச்சாமி கண்ணன் மற்றும் பணியாளர்கள் வாசகர்கள் கலந்து கொண்டனர் கலந்து கொண்டனர்.







■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல அலுவலகத்தில் 77ஆம் ஆண்டு குடியரசு தின விழாவை முன்னிட்டு 5வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் அவர்களின் தலைமையில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்





# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது

காளையார் கோவில், ஜன.27-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் குடியரசு தின விழா நடைபெற்றது. குடியரசு தின விழாவில் தலைமை ஆசிரியர் சுரேஷ் கொடியேற்றினார். மாணவர்களின் அணி வகுப்பு நடைபெற்றது. மாணவர்கள் சரோபினா, தேஜிகா, தேவரியான்சி செபிஸ்டன், முகேஷ், லிடிசினா ஆகியோர் குடியரசு தின விழா பற்றி சிறப்புரை ஆற்றினர். தலைமை ஆசிரியர் சுரேஷ் குடியரசு தின விழா பற்றி எடுத்துரைத்தார்.2026 ஜனவரி 26 அன்று, இந்தியா தனது 77 வது குடியரசு தினத்தை 'வந்தே மாதரம்' 150வது ஆண்டு கொண்டாடுகிறது. குடியரசு தினம் மூன்று இந்திய தேசிய விடுமுறை நாட்களில் ஒன்றாகும், மேலும் இது ஜனவரி 26, 1950 அன்று நிகழ்ந்த



இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டதை நினைவுகூரும். இந்தியா ஆகஸ்ட் 15, 1947 அன்று பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது . ஆனால் அதன் முதல் மூன்று ஆண்டுகளுக்கு நாடு பெரும்பாலும் 1935 ஆம் ஆண்டு காலனித்துவ இந்திய அரசுச் சட்டத்தால் ஆளப்பட்டது.

சுதந்திரம் அறிவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, மாகாண சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசியலமைப்புச் சபை, புதிதாக சுதந்திரம் பெற்ற நாட்டை நிர்வகிக்கும் ஒரு அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டது. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, இந்திய அரசியலமைப்பு நிறைவடைந்து இந்தியாவின் சுதந்திர ஜனநாயக அரசாங்கத்தை நிறுவுவதை உறுதிப்படுத்தியது. 1930 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸால் பூர்ண ஸ்வராஜ் (முழுமையான சுயராஜ்ஜியம்) சுதந்திரப் பிரகடனத்திற்கு ஒப்புதல் அளிக்கும் விதமாக ஜனவரி 26 அதிகாரப்பூர்வமாக இயற்றப்பட்ட தேதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது

இது பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கான முதல் உறுதியான படியாகக் கருதப்படுகிறது.

1950 அரசியலமைப்பின் மூலம், நாடு அதிகாரப்பூர்வமாக இந்திய குடியரசு என்று அழைக்கப்பட்டது அதன் முன்னுரையின்படி, "அனைத்து குடிமக்களுக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைப் பாதுகாக்கும்" ஒரு இறையாண்மை கொண்ட சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசு என்று குடியரசு தின விழா பற்றி தலைமை ஆசிரியர் எடுத்துரைத்தார்.. இளம் செஞ்சிலுவைச் சங்க மாணவ உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில் பள்ளி ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம், பள்ளி மேலாண்மை குழு தலைவி, மற்றும் உறுப்பினர்கள், சுகாதாரப் பணியாளர்கள், சத்துணவு பொறுப்பாளர்கள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் மற்றும் கிராம பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. ஆசிரியர் முருகன் நன்றியுரை ஆற்றினார். தேசிய கீதத்துடன் விழா நிறைவடைந்தது.





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் 77 வது குடியரசு தின விழா நடைபெற்றது. SMC தலைவர் ராஜாத்தி தேசியக்கொடியை ஏற்றினார். முன்னாள் மாணவர்களும், வழக்கறிஞர் மற்றும் ஊழல் தடுப்பு துறையில் பணிபுரியும் மணிகண்டன் மற்றும் நவீன் ஆகியோர் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். பள்ளியின் தலைமையாசிரியர் பாலகிருஷ்ணன் தலைமையில் விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. ஷிவிசி உறுப்பினர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்



■ புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகா கந்தர்வகோட்டை ஊராட்சி 77 வது குடியரசு தின விழா கிராம சபை கூட்டம் நடைபெற்றது வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி செயலாளர் கிராம நிர்வாக அலுவலர் பொதுமக்கள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர் சமூக ஆர்வலர் முக்கையா

# கீழக்கோட்டையில் குடியரசு தினப் பெருவிழா கொண்டாட்டம்

காளையார்கோவில், ஜன.27-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியத் திலுள்ள கீழக் கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குடியரசு தினப் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். தலைமையாசிரியை தெய்வானை தேசியக் கொடியை ஏற்றி வைத்து குடியரசு தின சிறப்புரையாற்றினார். நூற்றுக்கு மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கு தேச தலைவர்கள் காந்தியடிகள் ஜவஹர்லால் நேரு சுபாஷ் சந்திரபோஸ் வ. உ. சிதம்பரனார் பாரதியார் வேலுநாச்சியார் ஆகியோரின் முகமூடி அணிவிக்கப்பட்டு தேச தலைவர்களின் தியாகம் மிகுந்த வாழ்க்கை வரலாறு விளக்கப்பட்டது. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. மாணவி தன்ஷிகா குடியரசு தின செய்தி வழங்கினார். மாணவிகள் நந்திகா சிவப்பிரியா தனுஷ்கா கவிதை வாசித்தார்கள். மாணவன் பிரதாப் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். பள்ளி மேலாண்மை குழு மேனாள் தலைவர் சித்ரா உறுப்பினர்கள் தூய்மை பணியாளர் சத்யா பெற்றோர்கள் பழைய மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்.







# பழனியில் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு குடியரசு தின விழாவை முன்னிட்டு முன்னாள் ராணுவ வீரர்கள் மெடல்கள் வழங்கினர்

திண்டுக்கல், ஜன.27-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளையின் சார்பாக 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது இதில் முன்னாள் ராணுவ வீரர்கள் கலந்து கொண்டு தேசிய கொடியினை ஏற்றி இனிப்புகள் வழங்கி வாழ்த்துரை வழங்கினர். மற்றும் முன்னாள் ராணுவ வீரர்கள் தொடர்ந்து பழனி பகுதி களில் சமூக சேவைகள் மற்றும் மக்கள் தேவைகளை புரிந்து கொண்டு அவ்விடத்திற்கு சென்று நலத்திட்டங்களை வழங்குவதும் போன்ற உதவிகள் செய்து வரும் நிர்வாகி களுக்கு மெடல்கள் வழங்கினர் நம்பிக்கை சிறகுகள் அறக்கட் டளையின் மாவட்ட செயலாளர் ஜோதி சண்முகம் தலைமையேற்று விழாவினை நடத்தினார் இதில் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளையின் மாநில தலைவர் ரமேஷ் மாரிமுத்து மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் மேலும் பொது மக்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர்







## எர்ர அள்ளி ஊராட்சியில் குடியரசு தின விழா

கிருஷ்ணகிரி, ஜன.27-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் எர்ரஅள்ளி ஊராட்சியில் 77 வது குடியரசு தின விழாவையொட்டி கிராமசபை கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், சரவணன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

ஊராட்சி செயலர் சத்தி அனைவரையும் வரவேற்று தீர்மானங்களை வசித்தார். நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செந்தாமரைதமிழரசு, கிராம நிர்வாக அலுவலர் ஆனந்தன்,சுகாதார ஆய்வாளர் அசோக்குமார்,கிராம சுகாதார செவிலியர் ஆனந்தி,ஆசிரியை அருணா மற்றும் தமிழக எழுச்சி விவசாயிகள் சங்க தலைவர் வெங்கடேசன், செயலாளர் பழனி,முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் சந்திர பிள்ளை,செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பொது சுகாதாரம்,கழிப்பிடம் மின்சார வசதி, தார் சாலை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய பணிகளை உடனடியாக விரைந்து முடிக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மேலும் ஹவுசிங் போர்டு மற்றும் போத்தாபுரம் வழியாக ஜெகதாப் வரை தார் சாலை அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டதையொட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது.மேலும் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

## கிருஷ்ணகிரியில் திமுக சார்பில் ஆண்களுக்கான கைப்பந்து போட்டி : மதியழகன் எம்எல்ஏ., பரிசு மற்றும் கோப்பையினை வழங்கினார்

கிருஷ்ணகிரி, ஜன.27-

கிருஷ்ணகிரியில் திமுக சார்பில் நடந்த ஆண்களுக்கான கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு மற்றும் கோப்பையினை மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., வழங்கினார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு நகர திமுக சார்பில், ஆண்களுக்கான கைபபந்து போட்டி பாப்பாரப்பட்டி ஏரிக்கரையில் நடந்தது . இதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து



32 அணிகள் கலந்து கொண்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., தலைமை வகித்து, முதல் பரிசு பெற்ற அணிக்கு பரிசு மற்றும் கோப்பை யினை வழங்கினார்.

இதே போல 2, 3, 4ம் இடங்களை பிடித்தவர்களுக்கும் ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, விளையாட்டு மேம்பாட்டு அணி நகர அமைப்பாளர் ராம்குமார், இளைஞர் அணி தணை செயலாளர் நிசாந்த், நிர்வாகிகள் நாகராஜன், ஜான்டேவிட், விஜய்ராஜசேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## "3வது பொருளாதார நாடு இலக்கை நோக்கி இந்தியா" குடியரசுத் தலைவர் முர்மு உரை



புதுடெல்லி, ஜன.27-

நாட்டின் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில் கூறியதாவது:

உலகளவில் நிச்சயமற்ற தன்மை நிலவும் நிலையில், நமது நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. உலகின் 3வது பெரிய பொருளாதார நாடு என்ற இலக்கை நோக்கி இந்தியா செல்கிறது.

ஜிஎஸ்டி வரியை மத்திய அரசு குறைத்தது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தும். தொழிலாளர் சீர்திருத்தங்கள் தொழிலாளர்களுக்கு பயன் அளிக்கும்.

தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை அதிகரிக்கும். முதலில் நாடு என்ற உணர்வுடன் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி, இந்தியாவை மேலும் சிறப்படையச் செய்ய வேண்டும். தேசபக்தி உணர்வை வலுப்படுத்த குடியரசு தினம் ஒரு வாய்ப்பு.

உலக வரலாற்றில் மிகப் பெரிய குடியரசின் அடிப்படை ஆவணமாக இந்திய அரசியல் சாசனம் உள்ளது. 2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் இளைஞர் சக்தி முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு திரவுபதி முர்மு கூறினார்.



## கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் ரூ.17.15 லட்சம் மதிப்பில் ஆழ்துளை கிணறு, பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி - அசோக்குமார் எம்எல்ஏ., தொடங்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, ஜன.27-

கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் ரூ.17.15 லட்சம் மதிப்பில் ஆழ்துளை கிணறு, பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணியை அசோக்குமார் எம்எல்ஏ., தொடங்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி ஒன்றியம் பெரியமுத்தூர் ஊராட்சி கொல்லாபுரியம்மன் கோயில் கொட்டாயில், ரூ.4.15 லட்சம் மதிப்பில், புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கப்படுகிறது. இதே போல், கிருஷ்ணகிரி ஒன்றியம் ஜிஞ்சுப்பள்ளியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில், ரூ.13 லட்சம் மதிப்பில் பல்நோக்கு கட்டடம் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படுகிறது. இதற்கான பணிகளை கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் நேற்று பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஒன்றிய செயலாளர் கண்ணியப்பன், சூர்யா, அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி, மாவட்ட மகளிர் அணி தலைவி சுகந்தி மாது. முன்னாள் கவுன்சிலர் ஜெயராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## காவேரிப்பட்டணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் குடியரசு தின விழா

கிருஷ்ணகிரி.ஜன.27-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 77 வது குடியரசு தின விழா வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன்.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ரேகா,மற்றும் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## தஞ்சை வீரமா காளியம்மன் ஆலயத்தில் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு கறி விருந்து

### நேர்த்தி கடனை நிறைவேற்றிய இஸ்லாமிய தம்பதியினர்

தஞ்சை, ஜன.27-

வேண்டுதல் நிறைவேறியதால் தஞ்சை அருள்மிகு. வீரமா காளியம்மன் ஆலயத்தில் கிடா வெட்டி, பூஜை செய்து 200க்கும் மேற்பட்டவர்களுக்கு கறி விருந்து பரிமாறி தனது நேர்த்தி கடனை நிறைவேற்றிக் கொண்டனர் இஸ்லாமிய தம்பதியினர். தஞ்சை நாவலர் நகரில் மளிகை கடை நடத்தி வருபவர் ஜாகிர் உசேன். 25 வயதான இவரது மகனுக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தார். ஜாகிர் உசேன் பெரும்பாலும் இந்து மக்களிடம் அண்ணன் தம்பி அக்காள் தங்கை மாமன் மச்சான் என்று உறவு முறையில் அந்த பகுதியில் பழகி வந்துள்ளார்.

இவரது நிலைமையை அறிந்த நாவலர் நகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஜாகிர் உசேனுக்கு ஆறுதல் கூறியதோடு அந்த பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கும் அருள்மிகு வீரமா காளியம்மன் ஆலயத்தில் ஜாகிர் உசேனை பிரார்த்தனை செய்து கொள்ள சொன்னார்கள் மிகவும் சக்தி வாய்ந்தது வேண்டுதல் நிறைவேற்றி தரக்கூடிய அம்மன் எனக் கூறியதால் ஜாகிர் உசேன் மனம் உருகி வீரமாகாளியம்மன் ஆலயத்தில் சென்று பிரார்த்தனை செய்துள்ளார். வேண்டுதல் படி ஜாகிர் உசேன் மகன் பூரண குணமடைந்து வீடு திரும்பியதால் வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்ள முடிவு செய்தார்

அதன்படி இன்று தஞ்சை நாவலர் நகரில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு வீரமாகாளியம்மன் ஆலயத்தில் பொங்கல் வைத்து படையல் இட்டு பின்னர் கிடாவெட்டி அந்த பகுதியைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்டவர்களுக்கு கறி விருந்து பரிமாறி தனது நேர்த்தி கடனை நிறைவேற்றிக் கொண்டார். தனது மகன் குணம் ஆனதற்கு இந்த பகுதி மக்கள் தான் எனக்கூறி அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொண்டனர் ஜாகிர் உசேன் தம்பதியினர்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் நடைபெற்ற 77வதுகுடியரசு தின விழாவில் பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. போட்டியில் பங்கேற்றவர்களுக்கு நினைவு பரிசு சான்றுகளும் வழங்கப்பட்டது இந்நிகழ்வில்துணை மேயர் தி.நாகராஜன் கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன் , மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு மதுரை மாநகராட்சி ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு இடையே காலநிலை மாற்றம் தலைப்பில் நடைபெற்ற ஓவிய போட்டியில் கஸ்தூரிபாய் காந்தி மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவி அ.பவிஷ்யஸ்ரீ இரண்டாம் இடத்தை பெற்றார்.

## கிருஷ்ணகிரியில் ஒன்றிய அளவிலான முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா : கலெக்டர், எம்எல்ஏ., துவக்கி வைத்தனர்

கிருஷ்ணகிரி, ஜன.27-

கிருஷ்ணகிரியில் ஒன்றிய அளவிலான முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழாவினை கலெக்டர், எம்எல்ஏ., துவக்கி வைத்தனர்.

ஒன்றிய அளவிலான முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - 'இது நம்ம ஆட்டம் 2026' விளையாட்டுப் போட்டிகள் கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் நேற்று துவங்கியது. ஒன்றிய அளவில், தடகளம், 100 மீ., ஓட்டம், குண்டு எறிதல், கபாடி, வாலிபால், கேரம், கயிறு இழுத்தல், ஸ்ட்ரீட் கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடக்கிறது. இதில், 16 முதல், 35 வயது வரையுள்ள



வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். இந்த விளையாட்டுப் போட்டிகளை, கலெக்டர் தினேஷ்குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தனர்.

இதில், தனிநபர் மற்றும் குழுப்போட்டிகளில் முதல் இடம் பெறும் வீரர்களுக்கு தலா ரூ.3,000, இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.2,000, மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.1,000 பரிசு வழங்கப்பட உள்ளது. நேற்று தடகளம், ஸ்ட்ரீட் கிரிக்கெட், கேரம், வாலிபால் ஆகிய போட்டிகள் நடந்தது. நாளை (27ம் தேதி) கயிறு இழுத்தல், கபடி, த்ரோபால் ஆகிய போட்டிகள் நடக்க உள்ளது. இதே போல் நேற்று ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மாவட்டத்தில் உள்ள 10 ஒன்றியங்களில் துவங்கி வரும் 27ம் தேதி வரை நடக்கிறது. இப்போட்டியில் பங்கேற்க கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 6,300 பேர் பதிவு செய்துள்ளனர். இதனால் தமிழகத்திலேயே 4வது இடத்தை பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் கவிதா, மாவட்ட விளையாட்டு நலன் அலுவலர் (பொ) நடராஜ முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார், டிஎஸ்பி., ராமசந்திரன், நகராட்சி ஆணையாளர் சதீஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161